V11His

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2025

-----

## வகுப்பு 11

கால அளவு: 3.00 மணிநேரம் **வரலாறு** மொத்த மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20×1=20**

ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) சிந்து நாகரிகம் ஏறத்தாழ ............. இலிருந்து வீழ்ச்சி அடைந்தது.
அ) பொ.ஆ.மு. 1800 ஆ) பொ.ஆ.மு. 1900
இ) பொ.ஆ.மு. 1950 ஈ) பொ.ஆ.மு. 1955

2) ஆதிச்சநல்லூர் ............. மாவட்டத்தில் அமைந்துள்ளது.
அ) கோயம்புத்தூர் ஆ) திருநெல்வேலி இ) தூத்துக்குடி ஈ) வேலூர்

3) வட இந்தியாவில் 16 மகாஜனபதங்களில் வலிமை படைத்ததாக வளர்ந்த அரசு ............. ஆகும்.
அ) கோசலம் ஆ) அவந்தி இ) மகதம் ஈ) குரு

4) அசோகரது தூண்களில் உள்ள பிராமி எழுத்துக்களுக்கு பொருள் கண்டுபிடித்தவர்
அ) தாமஸ் சாண்டர்ஸ் ஆ) ஜேம்ஸ் பிரின்செப்
இ) சர் ஜான் மார்ஷல் ஈ) வில்லியம் ஜோன்ஸ்

5) கரிகாலன் ............. மகனாவார்.
அ) செங்கண்ணன் ஆ) கடுங்கோ இ) இளஞ்சேட்சென்னி ஈ) அதியமான்

6) ............. பகுதியில் ரோமானிய நாணயங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.
அ) அரிக்கமேடு ஆ) ஆதிச்சநல்லூர் இ) புகார் ஈ) பல்லாவரம்

7) பொருத்துக:

| எழுதியவர் | | இலக்கியப் படைப்பு |
|---|---|---|
| i) தன்வந்திரி | - | 1. சூரிய சிந்தாந்தா |
| ii) வராஹமிகிரா | - | 2. அமரகோஷா |
| iii) ஆர்யபட்டர் | - | 3. பிருகத் சம்ஹிதா |
| iv) அமரசிம்மா | - | 4. ஆயுர்வேதா |

அ) 4, 3, 2, 1 ஆ) 4, 1, 2, 3 இ) 4, 2, 1, 3 ஈ) 4, 3, 2, 1

8) கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?
அ) தர்மபாலர் சோமபுரியல் பெரியதொரு பௌத்த விகாரையைக் கட்டினார்.
ஆ) இராமபாலர் இராமசரிதத்தை எழுதினார்.
இ) மகிபாலர் கீதங்கள் வங்காளத்தின் கிராமப்புறங்களில் இப்போதும் பாடப்படுகின்றன.
ஈ) கௌட பாடர் ஆகம சாத்திரத்தை இயற்றினார்.

9) காம்போஜம் என்பது நவீன .............
அ) அஸ்ஸாம் ஆ) சுமத்ரா இ) ஆனம் ஈ) கம்போடியா

10) கஜினி மாமுது இந்தியாவுக்குள் ............. முறை இராணுவத் தாக்குதல்கள் நடத்தினார்.
அ) 15 ஆ) 17 இ) 18 ஈ) 19

11) ............. ஒரு கலத்துக்குச் சமம் ஆகும்.
அ) 28 கி.கி ஆ) 27 கி.கி இ) 32 கி.கி ஈ) 72 கி.கி

12) விஜயநகர அரசின் அரச முத்திரை .............
அ) பன்றி ஆ) புலி இ) மீன் ஈ) வில்

13) இராமானந்தரின் சீடர் .............
அ) சைதன்யர் ஆ) மீராபாய் இ) குருநானக் ஈ) கபீர்

14) கூற்று : பாபர் முதலாம் பானிப்பட் போரில் வெற்றி பெற்றார்.
காரணம் : பாபர் பீரங்கிப் படையை போரில் பயன்படுத்தினார்.
அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.
ஆ) கூற்று தவறு; காரணம் சரி.
இ) கூற்று தவறு; காரணமும் தவறு.
ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

15) சிவாஜியின் ஆலோசனை சபை ............. என்று அழைக்கப்பட்டது.
அ) அஷ்டபிரதானம் ஆ) அஷ்டதிக்கஜங்கள்
இ) நவரத்தினங்கள் ஈ) பஞ்சபாண்டவர்கள்

16) நீலநீர்க் கொள்கையுடன் தொடர்புடையவர் .............
அ) பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா ஆ) அல்போன்ஸோ டி அல்புகர்க்
இ) நீனோ டா குன்கா ஈ) ஆன்டோனியோ டி நாரான்கா

17) சென்னைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட ஆண்டு .............
அ) 1837 ஆ) 1861 இ) 1844 ஈ) 1857

18) வேலுநாச்சியார் ............. அரசருடைய மகள்.
அ) சிவகங்கை ஆ) புதுக்கோட்டை இ) இராமநாதபுரம் ஈ) பழவநத்தம்

www.Padasalai.Net

19) ''வேதங்களை நோக்கி திரும்புக'' என்று முழக்கமிட்டவர் ............ ஆவார்.
அ) இராஜாராம் மோகன்ராய் ஆ) தயானந்த சரஸ்வதி
இ) விவேகானந்தர் ஈ) இராமகிருஷ்ண பரமஹம்சர்

20) நவீன இந்தியாவின் விடிவெள்ளி என்று அறியப்படுபவர் ............
அ) இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆ) தயானந்த சரஸ்வதி
இ) பண்டித ரமாபாய் ஈ) சுவாமி விவேகானந்தர்

## பகுதி - II

**7×2=14**

**குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) பெருங்குளம் - சிறுகுறிப்பு வரைக.
22) ஜென்ட் அவஸ்தாவைப் பற்றி எழுதுக.
23) மௌரிய அரசு பற்றி ஆய்வுக்கு உதவும் இலக்கியச் சான்றுகள் பற்றி சிறுகுறிப்பு தருக.
24) ஹுணர் குறித்து நீங்கள் அறிவது என்ன?
25) ஐஹோல் கல்வெட்டு குறித்துச் சிறுகுறிப்பு வரைக.
26) நாற்பதின்மர் அமைப்பு.
27) இராமானந்தரின் போதனைகள் யாவை?
28) சரஸ்வதி மஹால் நூலகம் பற்றி நீ அறிந்தவற்றைப் பற்றி எழுதுக.
29) இராமலிங்க அடிகளார் பற்றி நீவிர் அறிவன யாவை?
30) அம்பாய்னா படுகொலை பற்றி சிறுகுறிப்பு வரைக.

## பகுதி - III

**7×3=21**

**குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) காட்டைத் திருத்தியதில் இரும்பின் பங்களிப்பு குறித்து மதிப்பிடுக.
32) கிழார் - வேளிர் இருவருக்குமுள்ள வேறுபாடுகள்.
33) மினாண்டர் குறித்து நீங்கள் அறிந்தவை யாது?
34) எல்லோரா மற்றும் எலிஃபெண்டாவின் நினைவுச் சின்னங்கள்.
35) தொடக்ககாலப் பாண்டியரால் கட்டப்பட்ட குடைவரைக் கோவில்கள் யாவை?
36) ராக்சஷி தங்கடி போர்
37) அக்பரது மன்சப்தாரி முறை
38) ''ஆனந்தரங்கர் நாட்குறிப்பு''
39) சார்லஸ் உட் அறிக்கை
40) குதுப்மினார் பற்றி எழுதுக.

## பகுதி - IV

**7×5=35**

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

41) அ) திட்டமிடப்பட்ட நகரங்களான ஹரப்பா, மொகஞ்சதாரோ பற்றி எழுதுக.
**(அல்லது)**
ஆ) தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்களைப் பற்றி விவாதிக்க.

42) அ) மௌரியப் பேரரசு பற்றி நாம் அறிய உதவும் சான்றுகளைப் பற்றி விளக்கவும்.
**(அல்லது)**
ஆ) சங்க காலம், சங்க காலத்தைத் தொடர்ந்து உடனடியாக வந்த காலத்தைச் சேர்ந்த வணிகர்கள் மற்றும் தொலைதூர வணிகம் பற்றி விளக்குக.

43) அ) ''குப்தர் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம்'' - விவாதிக்கவும்.
**(அல்லது)**
ஆ) கஜினி முகமதுவையும் கோரி முகமதுவையும் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காட்டுக.

44) அ) முகமது கவானின் ஆட்சிமுறை மற்றும் ராணுவ நிர்வாகம் பற்றி விவரி.
**(அல்லது)**
ஆ) ''வருவாய் நிர்வாகத்தில் ஷெர்ஷா அக்பரது முன்னோடி'' - விளக்குக.

45) அ) சிவாஜியின் இராணுவ அமைப்பு அவரது வெற்றிக்கு எவ்வாறு வழிவகுத்தது?
**(அல்லது)**
ஆ) வெல்லெஸ்லி அறிமுகப்படுத்திய துணைப்படைத் திட்டத்தினைப் பற்றி விவரி.

46) அ) தென் தமிழகத்தில் பாளையக்காரர் அமைப்பு முறை பற்றி விவரிக்கவும்.
**(அல்லது)**
ஆ) **கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் அக்பர் பேரரசின் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்:**
(i) பானிப்பட் (ii) ஆஜ்மீர் (iii) லக்னோ (iv) ஆக்ரா (v) லாகூர்

47) அ) தமிழ்நாட்டில் நடந்த சமூக சீர்திருத்த இயக்கங்களை எடுத்துக்காட்டுக.
**(அல்லது)**
ஆ) முகலாயர் காலத்தில் நிகழ்ந்த ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளுக்குக் காலக்கோடு வரைந்து காட்டுக.

----------

www.Padasalai.Net